**செய்தி வெளியீடு எண்: 875** **நாள்: 03.12.2018**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஜெ.ஜெ.நகர் கோட்டத்திற்குட்பட்ட முகப்பேர் கிழக்கு (ம) மேற்கு, முகப்பேர் ஏரி, முகப்பேர் ஏரி (நிலவங்கி), அம்பத்தூர் பகுதி I,II (ம) III, நொளாம்பூர் திடடப்பகுதி I (ம) II, ஆவடி மற்றும் திருமுல்லைவாயல் ஆகிய திட்டப்பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஒதுக்கீடுதாரர்கள் முழுத்தொகை செலுத்தி இருப்பின்/ஒதுக்கீடுக்குறிய அசல் ஆவணங்கள் இவ்வறிப்பு வெளிவந்த 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு நேரில் வந்து கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பித்து விற்பனை பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1. உறுதி அறிக்கை ரூ.20/– பெறுமான முத்திரை தாளில் தட்டச்சு செய்து அரசு அங்கீகாரம் பெற்ற அலுவலரிடம் கையொப்பம் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. ஆளறி சான்றிதழ் (Photo Identification) அரசு அங்கிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. ஆய்வு கட்டணம் இவ்வலுவலக காசாளர் பிரிவில் செலுத்தி அதற்கான ரசீதினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. மேற்கூறிய குடியிருப்பிற்குரிய தொகையினை செலுத்த வங்கியில் வீட்டுவசதி கடன் பெற்று இருந்தால் அவ்வங்கியிலிருந்து தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. அரசினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, (ஜெராக்ஸ்) நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அசல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். (ஆதார் அட்டை, குடும்ப அட்டை (ம) வருமான வரி (Pan Card).
6. நிலுவைத் தொகை ஏதேனும் செலுத்த வேண்டியிருப்பின் தங்களிடம் உள்ள ரசீதுகளை சமர்ப்பித்து கணக்கினை நேர் செய்து கொள்ளுமாறும், மேற்கூறிய ஆவணங்களை சமர்ப்பித்து விற்பனை பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**குறிப்பு:**

(ஒதுக்கீடுதாரர்களின் பெயர் மற்றும் மனை எண்கள்/அடுக்குமாடி குடியிருப்பு எண்கள் பற்றிய விபரங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய இணைய தளத்தில் www.tnhb.gov.in காணலாம்)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**